குமாரசுவாமிப்புலவர் நூலகம்
புலவகரகம்,
மயிலணி : : சுன்னாகம்,
இலங்கை.

உ

கணபதிதுணை.

# சோமவாரவிரத மான்மியம்.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரித் தமிழ்ப் போதகாசிரியரும்
இந்துசாதன பத்திரிகாசிரியருமாகிய

## ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை

எழுதியது.

இஃது

## தோத்திரப் பாக்களுடன்

யாழ்ப்பாணம்
சைவ பரிபாலன சபையாரால்
தமது
சைவப் பிரகாச யந்திரசாலையில்
அச்சிடப்பெற்றது.

௨ம் பதிப்பு.

சுக்கில௵ கார்த்திகைமீ.

1929.

(Copyright Registered.)

சிவமயம்.

# சோமவாரவிரத மான்மியம்.

திருச்சிற்றம்பலம்.

விநாயகவணக்கம்.

சத்தி யாய்ச்சிவ மாகித் தனிப்பர
முத்தி யான முதலைத் துதிசெயச்
சுத்தி யாகிய சொற்பொரு ணல்குவ
சித்தி யானைதன் செய்யபொற் பாதமே.

சோமசுந்தரேசுவரர்.

சடைமறைத்துக் கதிர்மகுடந் தரித்துநறுங்
கொன்றையந்தார் தணந்து வேப்பந்
தொடைமுடித்து விடநாகக் கலனகற்றி
மாணிக்கச் சுடர்ப்பூ ணேந்தி
விடைநிறுத்திக் கயலெடுத்து வழூதிமரு
மகனாகி மீன நோக்கின்
மடவாலை மணந்துலக முழுதாண்ட
சுந்தரனை வணக்கஞ் செய்வாம்.

தடாதகைப்பிராட்டியார்.

செழியர்பிரான் றிருமகளாய்க் கலைபயின்று
முடிபுனைந்து செங்கோ லோச்சி
முழுதுலகுஞ் சயங்கொண்டு நிறைகொண்டு
நந்திகண முனைப்போர் சாய்த்துத்
தொழுகணவற் கணிமணமா லிகைசூட்டித்
தன்மகுடஞ் சூட்டிச் செல்வந்
தழைவுறுதன் னரசளித்த பெண்ணரசி
யடிக்கமலந் தலைமேல் வைப்பாம்.

பூர்வகாலத்திலே, சகல வளங்களும் நிறைந்து விளங்கிய ஆரியவர்த்தம் என்னும் நாட்டிலே சித்திரவருமன் என்னும் பெயருடைய ஓர் அரசன் தன்னுயிர்போல் மன்னுயிரையுங் காத்துச் செங்கோல் செலுத்திவந்தான். அவ்வரசனுக்குப் பல புத்திரர் இருந்தனர். ஆனால் தனக்கு ஒரு புத்திரி இல்லையே என்பதை எண்ணி அவன் மனம் நொந்தான். கடவுளருளால் அவனுக்கு ஒரு புத்திரி பிறந்தாள். அவள் பிறத்தலும் அரசன் மிகவும் மனமகிழ்ந்து அப்பிள்ளைக்குச் சீமந்தநி என நாமகரணஞ்செய்து தன் புரோகிதர்களை அழைத்துத் தனது மகளின் சாதகத்தைக் கணித்துப் பலன் சொல்லும்படி அவர்களுக்குக் கூறினன். அவர்களில் ஒரு புரோகிதன் சாதகங் கணித்தபின் அரசனை நோக்கி, "அரசனே, உமது மகளின் சாதகபலனை நோக்குமிடத்து, இவள் கல்யாணத்தில் உமாதேவியையும், புத்திரபாக்கியத்தில் அதிதியையும், அழகில் தமயந்தியையும், குணத்தில் மகாலட்சுமியையும், கற்பிற் சாநகியையும், கல்வியிற் கலைமகளையும் ஒத்தவளாய் நெடுங்காலங் கணவனோடு இன்புற்று இனிது வாழ்வள்" என்றான். அரசன் அதனைக் கேட்டு எல்லையில்லாத சந்தோஷத்தையடைந்திருக்கும்போது அங்கிருந்த மற்றுமோர் புரோகிதன் "அரசே, உமது மகள் பதினாலுவயசில் அமங்கலையாவாள்" என்றான். அதனைக் கேட்ட அரசன் இடியின் சத்தத்தைக் கேட்ட பாம்பைப்போலத் திடுக்குற்று நெட்டுயிர்த்துப் பின்னர் ஒருவாறு தேறி அப்புரோகிதர்களுக்கு வேண்டிய பொருள் கொடுத்து அவர்களை அனுப்பிவிட்டு "விதியை யாரால் விலக்கமுடியும்" என்று

எண்ணி மகளின் பதினன்காம் வயசை எதிர்பார்த்துக் கொண் டிருந்தான்.

சீமந்தநியும் பூர்வபக்கத்துச் சந்திரன்போல் வளர்ந்து மங்கைப்பருவத்தை யடைந்தாள். ஒருநாள் அவளுடைய தோழியரில் ஒருத்தி அவளை நோக்கி "அரசகுமாரியே, நீ பதினலாம் வயதில் மங்கல்யம் இழப்பாய் என ஒரு சோதிடர் சொல்லியிருக்கின்றார்; அதனை எண்ணுந்தோறும் என் மனம் புண்ணுகின்றது" என்றாள். அதனைக் கேட்ட சீமந்தநி மிகவுக் துன்ப முற்றுச் சிறிதுநேரம் யோசித்துப் பின்னர் யாக்கிய வர்க்கர் என்னும் முனிவர் இருக்கும் பன்னசாலையை யடைந்து அவரது பத்தினியாகிய மயித்திரையின் கால்களில் விழுந்து வணங்கித் தனக்கு நேரப்போகும் ஆபத்தைச் சொல்லி அதனை நீக்கும் வழி யாதெனக் கேட்டாள். மயித்திரை அந்த அரசகுமாரியை எடுத் தணைத்து "மகளே, நீ ஒன்றற்கும் வருந்தவேண்டாம்; யான் சொல்லுகிறபடி செய்வாயாகில் உனக்கு ஒரு விபத் தும் வரமாட்டாது; விரதங்கள் எல்லாவற்றிலுஞ் சிறந்த தாகிய சோமவாரவிரதத்தை விதிப்படி அநுட்டிப்பா யாகில், உனக்கு நேரவிருக்கும் ஆபத்துச் சூரியனைக் கண்ட பனிபோல நீங்கும்" என்றாள். அதனைக் கேட்ட சீமந்தநி எல்லையில்லாத ஆனந்தங்கொண்டு "தாயே, நீ கூறிய சோமவார விரத மகத்துவத்தையும், அதனை அநுட்டிக்கும் முறையையும் சிறுமியாகிய எனக்குச் சொல்லுதல் வேண்டும்" எனக் கேட்டலும், மயித்திரை கூறுவாள்:

"மகளே, எல்லா விரதங்களிலும் சோமவார விரதமே சிறந்தது. அதிலும் சோமவாரத்திலே உதயந் தொடங்கி இரவிலே கடையாமம் வரையும் அமாவாசியிருப்பின் அது மூன்றுகோடி சிவராத்திரியை ஒக்கும். கார்த்திகை மாசத்திலேனும் மார்கழி மாசத்திலேனும் இரு அமாவாசை வருகின்ற மலமாசமொழிந்த மற்றும் எந்த மாசத்திலேனும் வரும் முதற் சோமவாரந் தொடங்கி இதனை அநுட்டித்தல் வேண்டும். அநுட்டிப்போர் முதனாளாகிய ஞாயிற்றுக்கிழமை யிரவு போசனஞ் செய்யாது சுத்தமான நிலத்திலே பாயின்றிப் படுத்துறங்கி, விடியற்காலத்தில் எழுந்து சிவபெருமானைத் தியானித்து நித்திய கருமங்களை முடித்து, காமம் முதலிய குற்றங்களை அறக்கடிந்து ஒரு தடாகத்தை அடைந்து கையிற் பவித்திரந் தரித்து, மனம் வாக்குக் காயம் என்னும் மூன்றும் ஒருப்பாடு பொருந்தச் சங்கற்பஞ் சொல்லிச் சிவபிரானைத் தியானித்து "சுவாமீ, இப்பூமியின்கண்ணேயுள்ள புண்ணிய தீர்த்தங்களில் ஆடிய பலனை இங்கே தந்தருளல்வேண்டும்" என்று ஸ்நானஞ் செய்து தோய்த்துலர்ந்த வஸ்திர மிரண்டு தரித்து விபூதி உருத்திராக்கம் விதிப்படி அணிந்து, யாதும் இடையூறு வராமைப்பொருட்டு முன்னர் விநாயகக்கடவுளைப் பூசித்தல்வேண்டும்; பின்னர்ச் சங்கற்பஞ் சொல்லி, அந்தரியாகத்தில் மனத்தைச் செலுத்தி, உச்சிக்குமேற் பன்னிரண்டுவிரலுயரத்துள்ள துவாதசாந்தப் பொருளைத் தியானித்து, பிருதிவி தத்துவம் முதல் நாததத்துவம் வரையிலுமுள்ள தத்துவசொரூபமாய் விளங்கும் சிவலிங்கப்பெருமானை ஆசனமூர்த்தி மூலத்தினாலே

பூசித்து, எண்ணெய்க் காப்பு, மாக் காப்பு, மஞ்சட் காப்பு, பஞ்சகௌவியம், பஞ்சாமிர்தம், நெய், பால், தயிர், தேன், சர்க்கரை, கருப்பஞ்சாறு, நாரத்தம்பழச் சாறு, எலுமிச்சம்பழச்சாறு, தமரத்தம்பழச்சாறு, குளஞ்சிப்பழச்சாறு, மாதுளம்பழச்சாறு, வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழம், தேங்காய்த்துருவல், இளநீர், சந்தனக்குழம்பு, நவகடம் என்பவைகளாலே அபிடேகஞ் செய்து திருவொற்றுடை சாத்தி, சந்தனம், கஸ்தூரி, புழுகு, பச்சைக்கர்ப்பூரம், குங்குமப்பூ, அட்சதை, அறுகு, வில்வம், வெள்ளைமந்தாரை, முல்லை, மல்லிகை, வெள்ளெருக்கு, வெண்டாமரை முதலிய வெண்ணிறப் பூக்கள், வெண்பட்டாடை, இரத்தினபரணம் என்னும் இவைகளைச் சாத்துதல்வேண்டும்; பஞ்சாக்கரத்தைப் பெண்பாலுக்கு இசைய உச்சரித்து உமாதேவியாரையும் இங்ஙனம் பூசித்தல்வேண்டும்; பின்னர் அன்னவகைக ளும், கறிவகைகளும், பண்ணியங்களும், பானீயமும், நிவேதித்து, தாம்பூலமும் முகவாசமுங் கொடுத்து, தூப தீபம் கண்ணாடி குடை சாமரம் வெண்புடைவை ஆல வட்டம் என்பவற்றைக் காட்டி, சகஸ்ர நாமஞ்சொல்லி, விதிப்படி எடுத்த வில்வத்தினால் அர்ச்சனைபண்ணி, “சுவாமீ! அடியேன் அறிந்தும் அறியாமலுஞ் செய்த குற்றங்களெல்லாவற்றையும் பொறுத்தருளுக” என்று விண்ணப்பஞ் செய்து மும்முறை வலம் வந்து வணங்கித் துதித்து விரும்பிய வரங்களை அருளும்படி இரந்து நிற் றல் வேண்டும்.

பூசைக்கு அருகரல்லாதவர் பொருள் கொடுத்துச் சிவப்பிராமணரைக்கொண்டு இப்புண்ணிய தினத்திலே சிவபிரானை விதிப்படி பூசை செய்வித்தல் வேண்டும்.

இவ்விரத தினத்திலே சிவபெருமானுடைய சந்நிதியிலே திருவலகிடுதல், திருமெழுக்கிடுதல், அலங்கரித்தல், தூபமிடுதல், நெய்விளக்கேற்றல், மாவிளக்கிடுதல் முதலிய சிவதொண்டுகளைச் செய்வோர் எல்லாப் பாவங்களும் நீங்கப்பெற்று முத்தியடைவர்.

அரசிளங்குமரியே, இனி இவ்விரதத்தின் வகையைச் சொல்லுகின்றேன் கேட்குதி: இவ்விரதம் ஐந்து வகைப்படும். அவையாவன: உச்சிப்பொழுதிலே உண்ணுதல், இரவிலே உண்ணுதல், உபவாசமாயிருத்தல், நித்திரைசெய்யாதிருத்தல், நான்கு யாமமுஞ் சிவபூசை செய்தல் என்பவைகளாம். இவ்வைந்தும் ஒன்றற்கொன்று விசேடமாகும். இவற்றுள் முதல் வகைப்படி அநுட்டிக்கச் சங்கற்பித்தோர் பிராதக்கால சந்தியும் மத்தியான சந்தியும் முடித்துக்கொண்டு சிவபூசையும் சிவதரிசனமுஞ்செய்து பகலிலே பதினைந்து நாழிகைக்கு மேல் மாகேசுரபூசைசெய்து சுற்றத்தாருடன் போசனஞ் செய்தல்வேண்டும். இரண்டாம் வகைப்படி அநுட்டிக்கச் சங்கற்பித்தோர் பிராதக்கால மத்தியான சாயங்கால சந்திகளை முடித்துக்கொண்டு சிவபூசையுஞ் சிவதரிசனமுஞ் செய்து போசனஞ் செய்தல்வேண்டும். மூன்றாம் வகைப்படி அநுட்டிக்கச் சங்கற்பித்தோர் மூன்று சந்திகளையும் முடித்துச் சிவபூசையுஞ் சிவதரிசனமுஞ் செய்து உபவாசமாகத் துயின்று மற்றைநாட் காலையில் இரண்டு

சந்தியும் முடித்து, சிவபூசையுஞ் சிவதரிசனமுஞ் செய்து மாகேசுரபூசைபண்ணிச் சுற்றத்தாரோடும் பாரணம் பண்ணல் வேண்டும். நான்காம் வகை அநுட்டிக்கச் சங்கற்பித்தோர் மூன்று சந்தியும் முடித்துச் சிவபூசையும் சிவதரிசனமுஞ் செய்து ஊணுறக்கமின்றி யாமந்தோறும் அந்தரியாகஞ்செய்து மற்றைநாட் காலையில் இரண்டு சந்தியும் முடித்து, சிவபூசையுஞ் சிவதரிசனமுஞ் செய்து பாரணம்பண்ணல்வேண்டும். ஐந்தாம் வகை அநுட்டிக்கச் சங்கற்பித்தோர் மூன்று சந்திகளையும் முடித்து, சிவபூசையும் சிவதரிசனமுஞ் செய்து ஊணுறக்கமின்றி யாமந்தோறும் சிவபூசை செய்து மற்றைநாட் காலையில் இரண்டு சந்தியும் முடித்துப் பாரணம் பண்ணல்வேண்டும். பாரணஞ் செய்தபின் பகலில் நித்திரை செய்யாது சிவபுராணங்களைப் படித்துக்கொண்டேனும் கேட்டுக்கொண்டேனும் காலங்கழித்தல் வேண்டும். பாரணம்பண்ணிய அப்பகலில் நித்திரை செய்தவர் நூறு சற்பிராமணரைக் காரணமின்றிக் கொன்ற மகா பாதகத்தை யடைவர். இந்த ஐவகையையும் எந்த வகைப்படி அநுட்டிக்கச் சங்கற்பித்தனரோ அந்த வகைப்படியே தவறுமல் அநுட்டித்தல் வேண்டும்.

இவ்விரதம் நோற்கவேண்டிய காலம்: ஒரு வருடம், இரண்டு வருடம், மூன்று வருடம், பன்னிரண்டு வருடம், வாழ்நா ளெல்லை என்பவைகளாம். விரதத்தைத் தொடங்கும்போது தாம் அநுட்டிக்கத் தொடங்கிய காலவெல்லையைக் குறித்துக்கொண்டே சங்கற்பித்தல் வேண்டும் சங்கற்பித்த எல்லை முடிவில் விதிப்படி

உத்தியாபனம் பண்ணல் வேண்டும். வாணுளெல்லவரையும் அநுட்டிப்போர் உத்தியாபனஞ் செய்யவேண்டியதில்லை. விரதத்தை இடையே விடுவோரும், உத்தியாபனஞ் செய்யாதோரும் அவ்விரத பலனை அடையமாட்டார்கள். ஆதலின் விரதத்தை இடையில் விடாது விதிப்படி அநுட்டித்து முடிவில் உத்தியாபனஞ் செய்தல் வேண்டும்.

மகளே, இனி இவ்விரத உத்தியாபன விதானஞ் சொல்லுகின்றேன் கேட்குதி: வெள்ளியினுலேனும் செம்பினுலேனும் சிவபிரானது திருவுருவையும் தேவியினது திருவுருவையும் சிற்பநூலில் வல்ல சிற்பியைக்கொண்டு செய்வித்தல்வேண்டும். திருவுருவுக்கு முப்பது களஞ்சு உத்தமம். இருபது களஞ்சு மத்திமம். பத்துக் களஞ்சு அதமம். சிவபிரானது திருவுரு ஒரு முகமும், மூன்று கண்களும், நான்கு புயங்களும், நான்கு கைகளில் மான் மழு அபய வரதங்களும், முடியிலே பிறையும் உடையதாகச் செய்வித்தல் வேண்டும். தேவியின் திருவுரு ஒரு முகமும், இரு தோள்களும், வலக்கை செங்கழுநீர் பிடித்ததாகவும், இடக்கை கீழே தொங்குகின்றதாகவும் செய்வித்தல்வேண்டும். யாகமண்டபமும் அதிலே குண்டமண்டல வேதிகைகளும் விதிப்படி செய்வித்தல்வேண்டும். ஞாயிற்றுக்கிழமையில் ஒருபொழுது போசனஞ்செய்து இரவில் உணவின்றிச் சுத்தமான நிலத்திற் படுத்துறங்கி அடுத்த தினமாகிய சோமவாரத்தில் வைகறையி லெழுந்து நித்தியகருமம் முடித்து மத்தியானம் தொடங்கிச் சாயங்காலம்வரையும் சிவபுரா

ணம் படித்து அல்லது கேட்டு, சாயங்காலந்தொடங்கி நான்கு யாமமும் மண்டலத்திலும், கும்பத்திலும், சிவலிங்கத்திலும் சிவபிரானைப் பூசைபண்ணுதல்வேண்டும். சந்நிதியிலே திருவுருக்களையும் வைத்துப் பூசைபண்ணுதல்வேண்டும். அவ்வப்பூசை முடிவிலே சிவமூலமந்திரத்தினாலே யாமந்தோறும் நூற்றெட்டாகுதி பண்ணுதல் வேண்டும். ஆயிரம் நாமஞ் சொல்லி ஆயிரம் வில்வஞ் சாத்துதல் வேண்டும். பஞ்சாக்கரத்தினாலே அருக்கியம் கொடுத்தல்வேண்டும். மூலமந்திரத்தினாலும் மற்றைய மந்திரங்களினாலும் அக்கினியை வளர்த்துப் பூரணாகுதி செய்து வேள்வியை முடித்தல்வேண்டும். விடிந்தபின்னர் நித்தியகருமங்களை முடித்துப் பதின்மூன்று வாழையிலைகளின்மேல் அரிசியையும் காய் கறிகளையும் பரப்பிப் பசுவின்பால்நிறைந்த பதின்மூன்று குடங்களை வெள்ளை வஸ்திரங்களினால் அலங்கரித்து அந்த அரிசிமேல் வைத்து, சிவார்ச்சனைக்குரிய சிவப்பிராமணர்களை வரித்து, காதணியும் மோதிரமும் கொடுத்து, சிவனாகப் பாவித்துப் பூசித்து, தக்கிணையுடன் வெண்ணிறப்பசு, பாதகுறடு, விசிறி, குடை, வஸ்திரம் முதலியனவற்றைத் தானஞ்செய்தல்வேண்டும். பின்பு குருவை அவர் பத்தினியோடும் ஆசனத்தில் இருத்தி அவ்விருவரையும் முறையே சிவபிரானாகவும் உமாதேவியாராகவும் பாவித்து, அவர்களைப் பட்டுவஸ்திரம் காதணி முதலியவற்றால் அலங்கரித்து, பூக்கொண்டு பூசித்து, சிவபெருமானையும் உமாதேவியாரையும் ஆவாகித்துப் பூசைசெய்து வெள்ளியாலாய திருவுருவை[illegible] பொன், பூமி, பசு முதலியவற்றையுக்

தானஞ்செய்தல் வேண்டும். இவ்வாறு உத்தியாபனம் முடித்துக் குருவினது அநுமதியுடன் சிவனடியார்களோடும் சுற்றத்தவர்களோடும் போசனஞ் செய்தல்வேண்டும்.

மன்னவன்மகளே, இன்னுமொன்று உரைப்பேன் இனிது கேட்டி; இச்சோமவார விரதத்தை அனுட்டிப்பவர், பகை பழி மனக்கவலை வறுமை முதலியன நீங்கி முற்பிறவிகடோறுஞ் செய்த பாவங்கள் ஒழியப்பெற்று இம்மையிற் சகல போகங்களையும் அனுபவித்து மறுமையிற் சிவகதியடைவர். இவ்விரதத்தைப் பூர்வத்தில் விஷ்ணுவும் பிரமாவும் இந்திரனும் சந்திரனும் அனுட்டித்து மேன்மையடைந்தார்கள். மேலும் இவ்விரதத்தை அனுட்டித்ததனால் வசிட்டர் அருந்ததியையும், சோமசன்மன் மிக்க செல்வத்தையும், தன்மவீரியன் மேலான கதியையும், கற்கன் புத்திர பாக்கியத்தையும் பெற்றனர். இன்னும் இவ்விரதத்தை அனுட்டித்ததனால் தத்தம் மனோரதம் நிறைவேறப் பெற்றார் பலர். விராடன் என்னும் ஓர் பார்ப்பான் அபுத்திபூர்வமாக இதனை அனுட்டித்து மேலான சிவகதியை அடைந்தானென்றால் புத்திபூர்வமாக அனுட்டிப்பவர்க்கு எப்பதவியும் எளிதிற் கைகூடுமல்லவா? ஆதலால் மகளே, நீயும் விதிப்படி இச்சோமவாரவிரதத்தை அனுட்டிப்பாயாயின் உனக்கு நேரவிருக்கும் பேராபத்து நீங்கும். நெடுங்காலம் உன் கணவனுடன் நீ சகல போகங்களையும் அனுபவித்து வாழ்வாய்" என்று மயித்திரை சீமந்தினிக்குச் சோமவார விரத மகிமையைக் கூறுதலும், அவள் அதனை அன்புடன் கேட்டு மனமகிழ்ந்து அம்மனிவர்பத்தினியிடம்

விடைபெற்றுக்கொண்டு தன் மாளிகைக்குச் சென்று அவ்விரதத்தை விதிப்படி அனுட்டித்துவரலாயினள்.

இஃது இங்ஙனமாக, நிடதநாட்டைப் பரிபாலித்த நளமகாராசனுடைய புத்திரன் இந்திரசேனன்; அவனது புதல்வன் சந்திராங்கதன். அச்சந்திராங்கதனைச் சித்திரவருமன் தனது மகளாகிய சீமந்தநிக்கு மணம் முடித்துவைத்தான். சந்திராங்கதனும் சீமந்தநியும் விஷ்ணுவும் இலக்குமியும் போலவும், மதனும் ரதியும் போலவும், சகலவிதமான இன்பங்களையும் அனுபவித்து வந்தனர். இங்ஙனம் அனுபவித்துவருங் காலத்திலே ஒருநாள் சந்திராங்கதன் பொழுதுபோக்காகத் தனது தோழர் சிலருடன் ஒரு தோணி மீதேறி யமுனையாற்றிலே போகும்போது, கடுங்காற்று வீசியதினாலும், அதிகமாக அலை மோதியதினாலும், தோணி வேகமாகச் சென்றமையினாலும், அநேகர் அதில் ஏறியிருந்தமையினாலும் தோணி கவிழ, ஐயோ! பரிதாபம்!! அத்தனை பேரும் ஆற்றில் அமிழ்ந்தினர். ஆற்றங்கரையில் நின்றோர், மருகனுந் தோழரும் ஆற்றில் மாண்டமையை மாமனாகிய சித்திரவருமனுக்குக் கூறினர். அவன் அதைக் கேட்ட மாத்திரத்திற் பதை பதைத்து ஆற்றங்கரைக்கு ஓடிப்போய் "என் மருகவோ, மருகவோ" எனக் கதறினன். இதற்கிடையிற் சீமந்தநியும் இச்செய்தியைக் கேட்டாள்; ஏக்கமுற்றாள்; அடியற்ற மரம்போல் நிலத்தில் வீழ்ந்தாள்; மூர்ச்சையானாள்; சிறிது அறிவு வரப்பெற்றாள்; இடியேறுண்ட சர்ப்பம் போல் நிலத்திற் புரண்டு புரண்டு புலம்புகின்றாள்:

"நீர்மலிந்த பண்ணை நிடதத்தார் மன்னவனே!
தார்மலிந்த மார்பா! தமியே னுயிர்த் துணையே!
சீர்மலிந்த சொல்வாணர் தீயகலிக் கோடைதெறும்
கார்மலிந்த வண்கைக் களிறேயோ! களிறேயோ!!

புன்னைச் செழுங்காவிற் பூவணையின் யாமுயங்கு
முன்னைப் பெரும்போகம் வேண்டாய் முனிந்துதான்
என்னைப் பிரிந்தாய்நீ யென்றாலும் யான்றமியேன்
உன்னைப் பிரிந்தாவி யுய்யேன் மற்றுய்யேனே."

என்று பலவாறு புலம்பி மேலும் "நான் நெருப்பில் வீழ்ந்து இறந்தாலன்றி இத்துயரம் என்னைவிட்டு நீங்காது" எனக்கூறிச் சீமந்தினி அக்கினிப் பிரவேசஞ்செய்ய நிச்சயித்தாள். அதனை யறிந்த அவள்தோழியர் அரசனிடஞ்சொல்ல, அரசன் பொட்டெனச் சென்று தன் மகளை எடுத்தணைத்து "என் செல்வமே, நீ அழவேண்டாம்; இவ்வுலகத்தில் விதியைவிலக்கினோர் ஒருவருமில்லை; 'ஆவது விதியெனில் அனைத்தும் ஆயிடும், போவதுவிதியெனில் அனைத்தும் போயிடும்'; என் மகளே! என்னாலும் உன்னாலும் ஏதொன்றும் முடியுமோ? முடியாது; ஆதலினாற்றான் எல்லாம் ஈசன் செயல் என்றிருப்பர் பெரியோர். நெடுங்காலம் பெண்குழந்தை இல்லாமையினால் நானும் உன் தாயும் எத்தனையோ விரதங்களை அனுட்டித்தும், எத்தனையோ புண்ணிய தீர்த்தங்களில் ஆடியும், எத்தனையோ தானங்களைச் செய்தும், எத்தனையோ சிவஸ்தலங்களுக்கு யாத்திரைசெய்தும் உன்னை அரிதிற் பெற்றோம்; அன்புடன் வளர்த்தோம்; அரசகுமாரனுக்கு மணம் முடித்துக் கொடுத்தோம்; உன்

விதி இதுவாயிற்று; இதற்காக நீ அக்கினிப் பிரவேசஞ் செய்தால் நாங்கள் உயிர்வாழோம்; ஆதலால் கண்மணீ, நீ என் சொல்லைத் தட்டாது கைம்மை விரதத்தை அனுட்டித்துக்கொண்டு எங்களுடன் இரு" என்று பலவாறு தேறுதல் கூறினன். தன் பிதாவின் சொற்களால் தேறுதல் அடைந்த சீமந்தநி அன்று தொடக்கம் கைம்மை நிலையை அநுசரித்துக்கொண்டு அநுதினமும் சிவபூசை செய்து சோமவார விரதத்தையும் முன்போல அனுட்டித்துவந்தாள்.

இங்ஙனமாக, தன் மகன் இறந்தான் என்னுஞ் செய்தியைக் கேட்ட நிடதநாட்டு வேந்தனாகிய இந்திரசேனனும் அவன் தேவியும் புத்திர சோகத்தாற் பெரிதுந் துயருழந்தனர். இதனையறிந்த வேற்றரசர் "இச்சமையந் தப்பினல் இனிச் சமையம் வாய்ப்பது அரிது" என்று எண்ணி நிடத நாட்டின்மீது படையெடுத்துவந்து அதனைக் கவர்ந்துகொண்டு, களமகாராசனுடைய மகனாகிய இந்திரசேனனையும் அவன் தேவியையுஞ் சிறைப் படுத்தினர்.

இச்சம்பவம் இவ்வளவில் நிற்க. இனி, யமுனை ஆற்றில் அமிழ்ந்திய சந்திராங்கதனுடைய தோழர்களையெல்லாம் முதலைவிழுங்கிவிட, அவன் மாத்திரம் முற்பிறப்பிற் செய்த புண்ணிய வசத்தினல் நாகர்கள்வாழும் பாதலத்திற்குப் போய் அங்கே ஓர் ஆற்றங்கரையில் இருந்தான். அப்படி இருக்கும்பொழுது அந்த ஆற்றில் ஸ்நானஞ் செய்யவந்த நாககன்னியர்கள் அவனைக்கண்டு "இவனர் புதியவனயிருக்கின்றான்" என்று சொல்லிக்

கொண்டு அவனை அழைத்துச் சென்று தங்கள் அரசனாகிய தக்ஷகனுடைய அரமனைப் புறங்கடையில் நிற்கச் செய்துவிட்டுத் தாங்கள் மாத்திரம் உள்ளே போய்த் தங்கள் அரசனுக்கு அப்புதியவனுடைய வரவைக் கூறினார்கள். அரசன் தன் ஏவலரை அனுப்பி அவனைத் தன் முன்னர் அழைத்தலும் வந்த சந்திராங்கதன் தக்ஷகனை வணங்கி மிக்க விநயத்துடன் நின்றான். அப்பொழுது தக்ஷகன் சந்திராங்கதனைப் பார்த்து "அரசிளங்குமரனே, நீ யார்? உனது பெயரென்ன? நீ இருக்கும் நாடு எது? நீ இங்கே வந்த காரணம் என்ன? இவைகளை ஒளியாமல் எனக்குச்சொல்லுதி" என்று கேட்டலும், சந்திராங்கதன் "அரசனே, நான் அழியாப் பெரும்புகழ் படைத்த நளமகாராசனின் பௌத்திரன்; என் தந்தைபெயர் இந்திரசேனன்; என் நாடு நிடதநாடு; நானும் என் தோழரும் பொழுதுபோக்காக யமுனை ஆற்றில் தோணிமீது ஏறிச் செல்லும்போது தோணி புரண்டமையால், நானும் அவர்களும் ஆற்றில் வீழ்ந்தோம்; அவர்களெல்லோரையும் முதலைவிழுங்கிவிட்டது; நான்மாத்திரம் உம்மைத் தரிசிக்கும் நல்லூழ் இருந்தமையினால் தப்பிப் பிலத்துவார வழியாய் இங்கு வந்தேன்" என்றான். சந்திராங்கதன் கூறிய வார்த்தையைக் கேட்டுத் தக்ஷகன் மிகவும்மனமகிழ்ந்து "அரசகுமாரனே, நீங்கள் வழிபடும் கடவுள் யாவர்" எனக் கேட்டான்.

"வேந்தே, எவர் எல்லா ஆன்மாக்களுக்கும் எல்லா உலகங்களுக்கும் எல்லாத் தேவர்கட்கும் தலைவரோ, எவர் மேருவை வில்லாக வளைத்துத் தம் புன்னகையால்

மூப்புரங்களை எரித்தாரோ, எவர் பாற்கடலுள் எழுந்த ஆலகால விடத்தைத் தேவர்களைக் காக்கும்படி உண்டாரோ, எவர் இராசதகுணத்திற் பிரமாவை உண்டாக்கி உலகத்தைப் படைப்பித்தும், சாத்துவிககுணத்தில் விஷ்ணுவை உண்டாக்கி அதனைக் காக்கச் செய்தும், தாமத குணத்தில் உருத்திரனாகி உலகத்தைத் துடைத்தும் நின்றாரோ, எவர் வேதங்களுக்குத் தலைவராயும் காரணங்களுக்கெல்லாம் முதற்காரணராயும் ஒளியுள் ஒளியாயும் பிரம விஷ்ணுக்களாற் றேடிக் காணப்படாதவராயும் விளங்குகின்றாரோ, எவர் பஞ்சபூதங்கடோறும் அவற்றின் உள்ளீடாகியும் ஆன்மாக்கடோறும் அந்தரியாமியாயும் விளங்கிச் சகல பிரபஞ்சத்தையும் தமது வரம்பில் ஆற்றலால் இயக்குகின்றாரோ, எவர் கருணாசமுத்திரமாயும் வேண்டிய வரங்களைக் கொடுப்பவராயும் முக்குண வயப்படாதவராயும் அன்பர் தினையளவிற் செய்யும் பூசையைப் பனையளவெனக் கொள்பவராயும் கங்கையைச் சடையிற் சூடியவராயும் உமாதேவியாரை இடப்பாகத்தில் இருத்தியவராயும் பாம்புகளை ஆபரணமாக அணிந்தவராயும் தமது அருமைத் திருவடித் தாமரையை வேதசிரசில் வைத்தவராயும் ஆறு அத்துவாக்களாகிய பரிசுத்த ஆசனத்தில் எழுந்தருளியிருப்பவருமாகி உள்ளாரோ அவரே நாம் வழிபடு கடவுள்" என்று தக்ஷகனுக்குச் சந்திராங்கதன் சிவபிரவாகத்தை எடுத்துக் கூறினான்.

இவையனைத்தையுங் கேட்ட தக்ஷகன் பேராச்சரியமும் பெருவிம்மித[illegible] வடைந்து "அரசகுமாரனே, நீ

சிறுவனுயிருக்தும் கம் சிவபிரானுடைய மகிமைகளை என் காதுகள் குளிரும்படி எடுத்துரைத்தாய்; அவரது பிரவாகங்களைக் கேட்குந்தோறும் கேட்குந்தோறும் என் மனம் செருப்பிற்பட்ட மெழுகுபோல உருகுகின்றது. யான் உனக்கு ஒரு விஷயஞ் சொல்லுகின்றேன் கேள்; காம் வசிக்கும் இந்த உலகம் மாணிக்கமயமாய் விளங்கும்; இங்குள்ள காக கன்னியர் அரம்பையரை ஒப்பர்; இங்குள்ள நீர் எல்லாம் தேவாமிர்தத்தை ஒக்கும்; இங்குள்ள சோலைகளெல்லாம் கற்பகச் சோலையை நிகர்க்கும்; இங்கே உள்ளவர்கள் கரை திரை மூப்புச் சாக்காடு என்பனவற்றை அறியார். ஆதலினால் நீயும் இங்கே எங்களுடன் இரு" என்றான். அதற்குச் சந்திராங்கதன் "அரசனே, என்மேற் கொண்ட அன்புகாரணமாகவே இதனைக் கூறினீர். ஆனால் என் பிதாவுக்கு நான் ஒரே யொரு பிள்ளை; அவர் என்னையின்றி உயிர் வாழார்; என் மனைவியோ ஒன்றுமறியாச் சிறுமி; அவள் இதுவரையில் உயிரோடு இருப்பாள் என்பதுஞ் சந்தேகம். ஆதலால் அரசனே, என்னை என்னூருக்கு அனுப்பிவைப்பீராயின் நான் அந்த நன்றியை ஒருபோதும் மறவேன்" என்றான். தக்ஷகன் அதனைக் கேட்டு மன மகிழ்ந்து சந்திராங்கதனை ஆடை ஆபரணங்களால் அலங்கரிப்பித்து அவனுக்கு வேண்டிய திரவியமுங் கொடுத்து அதனைச் சுமந்துசெல்ல ஒரு அரக்கனையும், வழித்துணையாக ஓர் இராசகுமாரனையும் உடன்சென்று வரும்படி கட்டளை செய்து சந்திராங்கதனுக்கு விடை கொடுத்து அனுப்பினான். மூவரும் சீக்கிரத்தில் யமுனைக் கரையை அடைந்தார்கள்.

அங்கே ஆபரணுதிகள் இல்லாதவளாய் வெள்ளை வஸ்திரந் தரித்தவளாய் ஓர் இளம்பெண் தன தோழியருடன் ஸ்நானஞ்செய்வதைச் சந்திராங்கதன் கண்டு அவள் நீராடி முடிந்தபின் அவளைச் சமீபித்து, "நீ யார்? உனக்குக் கணவனுயிருந்தவன் யார்? உன்னைப் பார்க்கும்போது அமங்கலை போலத் தோற்றுகின்றுய்" என்றுன். அப்பெண் அவ்வார்த்தைக்குப் பதில் சொல்லாதவளாய் நாணத்தாற் றலைகுனிந்துகொண்டு கண்ணீர் சொரிய நின்றுள். அவளருகில் நின்ற தோழியருள் ஒருத்தி சந்திராங்கதனைப் பார்த்து "இவள் எங்கள் தலைவி; இவள் பிதாவின் பெயர் சித்திரவன்மன்; அவரே இந்த நாட்டை ஆள்பவர்; இவளுடைய நாயகன் சந்திராங்கதன்; அவர் ஒருநாள் தோணியில் ஏறி யமுனையாற்றின் மீது போகும்போது தோணி கவிழ்ந்தமையினுல் தோழருடன் ஆற்றில் மாண்டார். ஆதலால் இவள் கைம்மை விரதத்தை அநுட்டித்துக்கொண்டிருக்கிறுள். அவர் இறந்து மூன்று வருடங் கழிந்தன; இன்றைக்குச் சோமவார விரதமாதலால் ஸ்நானஞ்செய்யும்படி நமது இராசகுமாரி இங்கே வந்தாள்; 'பட்டகாலே படும்; கெட்ட குடியே கெடும்' என்றபடி இவளுக்கு இன்னுமொரு துன்ப மிருக்கின்றது; என்னவென்றுல், இவளது மாமனையும் மாமியையும் வேற்றரசர் சிறைப்படுத்தி அவர்களது நாட்டையும் கவர்ந்துகொண்டார்கள்" என்று அத்தோழி சொல்லிக்கொண்டு நிற்கும்பொழுது சந்திராங்கதன்மீது சந்தேகங்கொண்ட சீமந்தனி "நீர் யார், என் துன்பமான வரலாற்றை ஆவலுடன் கேட்கவேண்டிய காரணம் என்ன? என்னை உமக்குத் தெரியுமா?

அல்லது என் நாயகனைப்பற்றி ஏதும் அறிவீரா? உள்ளதைச் சொல்லும்" என்றாள். அதற்குச் சந்திராங்கதன் "பெண்ணே, யான் மானிடனல்லன்; ஒரு சித்தன்; இமைப்பொழுதில் சகல உலகங்களுக்கும் போய்வருவேன்; இன்னுமொன்று சொல்லுகின்றேன்; இங்கே வா" என்று சொல்லி அவளது தாமரைப் பூப்போன்ற கையைப் பிடித்துச் சிறிது தூரத்திற்கு அழைத்துச் சென்றான். தாதிமார் அச்சத்துடனும் நாணத்துடனும் சினத்துடனும் அவர்களைப் பார்த்துக்கொண்டுநின்றனர். சீமந்தநியும் அதிக நாணத்துடனும் பயிர்ப்புடனும், செய்வது இன்னதென்று அறியாதவளாய்த் திகைத்து நின்றாள். அப்பொழுது சந்திராங்கதன் அவள் காதில் இரகசியமாய் "பெண்ணே, உனது கணவன் வேறோர் உலகத்தில் இருக்கின்றார்; நான் அவருக்கு உயிர்த் தோழன்; அவர் இன்னும் இரண்டு தினங்களில் வந்து உன்னுடைய துன்பத்தை நீக்குவார்; நீ சந்தேகப் படாதே; சிவபிரான் ஆணை, அவர் உன்னிடம் நிச்சயமாக வருவார்; இதனைத் தெரிவிக்கும்படியாகத்தான் நான் இங்கே வந்தேன்; இப்பொழுது என் தாய்தந்தையரிடம் போகின்றேன்; பிறரிடத்தில் இதைக் குறித்து ஒன்றும் பேசாதே" எனக்கூறி அவ்விடத்தைவிட்டு அகன்றான்.

அவன் செல்லுதலும், சீமந்தநி "ஐயோ! தெய்வமே, யான் கண்டது கனவோ, அல்லது நினைவோ, இல்லை உண்மைதானோ, என் மனம் என் கணவனிடத்தல்லாமற் பிறரிடத்திற் செல்லாதே, அவரன்றி என்னைப் பிற

குமாரசுவாமிப்புலவர் நூலகம்
புலவகரகம்,



நீண்டப் பொறுக்கமாட்டேன், ஈதென்ன சோதனையோ? மயித்திரை முன்னர்ச் சோமவார விரத மான்மியத்தை எனக்குச் சொன்னபோது அதனை அநுட்டிப்பாயாகில் நெடுங்காலம் கணவனுடன் வாழ்வாயென்று கூறினளே, அது பலித்ததோ? அன்றியும் இப்படி ஒரு புரோகிதரும் என் பிதாவுக்கு முன்னே சொல்லியிருக்கின்றார். இங்கே வந்தவர் என் கணவரன்றிப் பிறரல்லர்; இது நிச்சயம். வேறு யார் என்னுடம்பைக் கூச்சமின்றிப் பரிசிக்க வல்லர்? வந்தவர் அவர்தான்! அவர்தான்!! ஐயோ! இதனை முன்னமே அறிந்தேனானால் அவரைச் செல்ல விட்டிருக்கமாட்டேனே. கைக்கெட்டியது வாய்க்கெட்டாமற் போயிற்றே; ஆனால் இப்பொழுதுதான் என்ன கேடு வந்தது; அவர் இன்னும் இரு தினத்தில் வருவார் அல்லவா? ஆக்கப் பொறுத்த நான் ஆறப் பொறுக்கக் கூடாதா?" என்று பலவாறு துயருற்றுத் தேறிநிற்கக் கண்ட தாதியர் அவளை மாளிகைக்கு அழைத்துச் சென்றனர்.

சீமந்தினி இங்ஙனம் இருப்ப, சந்திராங்கதன் தனது நண்பனாகிய நாககுமாரனுடன் நிடதநாட்டின் எல்லையை அடைந்து அங்குள்ள ஒரு சோலையின்கண்ணே தங்கி நாககுமாரனை நோக்கி "நண்பனே, நமது இராச்சியத்தைக் கவர்ந்துகொண்டு என் பிதாவையும் சிறைப்படுத்தியிருக்கும் இந்நாட்டு வேந்தனிடம் நீ போய், நான் பாதலலோகத்திலிருந்து மீண்டு வந்தமையை அவனுக்குக் கூறி என் பிதாவைச் சிறை நீக்கி எமது நாட்டையும் தரும்ப[illegible] மறுப்பானாயின் போர் செய்ய

வரும்படி கேட்டு வருதி" எனச் சொல்லியனுப்பினன். நாககுமாரன் விரைவில் நிடதநாட்டை ஆளும் அரசனை அடைந்து அவனை நோக்கி "அரசனே, யான் இந் நாட்டை முன்னர்ப் பரிபாலித்து இப்பொழுது உன்னாற் சிறைப்படுத்தப்பட்டிருக்கும் இந்திரசேனனது மகனாகிய சந்திராங்கதனுடைய தூதன்; அவன் பாதலத்திலுள்ள எங்கள் அரசனால் மிக்க வலிமை பெற்று இங்கே வந்து இந்நாட்டின் எல்லையில் இருக்கின்றான். தன் பிதாவின் சிறையையும் இந்நாட்டையும் விடுவது உனக்கிஷ்டமோ, அல்லது போர் செய்தல் இஷ்டமோ என்று கேட்டுவரும் படி என்னை உன்னிடம் அனுப்பினன்" என்றான். அவ்வரசன் தன் மந்திரிகள் முதலானோருடன் ஆலோசித்து உடனே இந்திரசேனனைச் சிறையில் நின்றும் விடுத்து அந்நாட்டை விட்டுத் தன்னாட்டிற்குச் சென்றான். நிடத நாட்டின் மற்றைப் பாகங்களைக் கவர்ந்து அரசாண்ட மற்றும் அரசர்களும் அவற்றைவிட்டுத் தத்தம் நாட்டிற் குச் சென்றனர்.

வேற்றரசர் நாட்டைவிட்டுப் போனபின்பு தனது மகனது வரவையறிந்த இந்திரசேனன் சொல்லிமுடியாத ஆநந்தங்கொண்டு தன் மகனை அழைத்து வரும்படி மந்திரிகளை அனுப்ப, அவர்கள் இராசகுமாரனுக்குச் சொல்ல, அவன் ஆவலுடன் வந்து தன் பிதாவின் பாதங்களில் வீழ்ந்து வணங்கினன். வணங்கிய மகனைப் பிதா வாரியெடுத்து மார்போடு அணைத்து முத்தமிட்டு ஆநந்தக்கண்ணீர் சொரிந்து நின்றான். சந்திராங்கதன் பின்பு தாயின் பாதங்களில் [illegible] கலும்

அவளும் கன்றைப் பிரிந்து பின்னர்க் கூடிய பசுவைப் போலக் கசிந்துருகி நின்றாள். பிரிந்த பிள்ளையைக் கண்ட மாத்திரத்தே பெற்றாருக்குண்டாகும் மகிழ்ச்சிக்கு ஓர் அளவுமுண்டா! சந்திராங்கதன் தான் ஆற்றில் வீழ்ந்தமையையும் பாதலத்தடைந்தமையையும், தக்ஷகனால் சன்மானிக்கப்பெற்றமையையும் பிறவற்றையும் ஆவலுடன் அறிய விரும்பிய தந்தைதாயருக்கும் சுற்றமித்திரருக்கும் மந்திரி முதலானோருக்கும் விரிவாய் எடுத்துக் கூறினான். நிடதநாட்டிலுள்ளோர் எல்லாரும் அவன் கூறியவற்றைக் கேட்டுக் கேட்டு அடங்கா மகிழ்ச்சிகொண்டனர்.

இது இங்ஙனமாக சந்திராங்கதன், தான் பாதலத்தினின்று மீண்டு வந்தமையைத் தன் மாமனாகிய சித்திரவன்மனுக்கும் தெரிவித்தான். சித்திரவன்மன் புதையல் அகப்பட்ட ஏழையைப்போல் மிகவும் உவகை கொண்டு உடனே தன் மகளுக்கு அச்செய்தியைத் தெரிவித்தான். சீமந்தினி ஆநந்தமாகிய கடலுள் மூழ்கிச் சிவபிரானது திருவருளின் பெருமையை நினைந்து நினைந்து ஆநந்தக் கண்ணீர் சொரிந்துநின்றாள். இதற்கிடையில் தோழியர்கள் சீமந்தினியின் கைம்மை உடையை மாற்றி அவளைப் "பொன்னின் குடத்திற்குப் பொட்டிடுவதுபோல" ஆடையாபரணங்களால் நன்கு அலங்கரித்தார்கள். சித்திரவன்மனும், அவன்தேவியும் சீமந்தினியும், தோழிமாரும், மந்திரி முதலானோரும் சேனை புடைசூழ வாத்தியங்கள் ஒலிக்க நிடத நாட்டிற்குச் சென்று அ... ஒரு சோலையில் இருந்துகொண்டு

தங்கள் வரவை இந்திரசேனனுக்குத் தெரிவித்தார்கள். இந்திரசேனன் தாமதமின்றி அவர்களிடஞ் சென்று அவர்களைத் தமது மாளிகைக்கு அழைத்துவந்து பலவாறு உபசாரஞ்செய்தான். சந்திராங்கதன் தன்னுடைய மாமனது அடிகளில் வீழ்ந்து வணங்க, அவன் மருகனை இரு கைகளாலும் எடுத்தணைத்து, முதுகுதைவந்து "அரசகுமாரனே, யானும் என் மகளும் உய்ந்தோம், உய்ந்தோம்" என்றான். சீமந்தநி, நாணத்துடனும் மகிழ்வுடனும் தன்னாயகனை வணங்கிநின்றாள். அவன் அன்பின் முதிர்ச்சியால் ஒன்றும் பேசமுடியாமனின்றான். நாயகனும் நாயகியும் அன்பைப் பருகுவார்போல் ஒருவரை யொருவர் பார்த்தனர். இருவருக்குமிடையிலுள்ள அன்பை அவர்கள் கண்களே பிறர்க்கு எடுத்துரைத்தன. அவ்விருவருக்கும் அச்சமையத்திலுண்டான ஆநந்தத்திற்கு எல்லையில்லை. இருவருக்கும் ஒரு சுபமுகூர்த்தத்தில் இரண்டாம் முறை விவாகம் சிறப்புற நடைபெற்றது. அவர்கள் சகல இன்பத்தையும் அநுபவித்து இல்லறத்தை வழுவாது இனிது நடாத்திவருங்காலத்தில், இந்திரசேனன் இராச்சிய பாரத்தைத் தன் மகனிடம் ஒப்புவித்துவிட்டுத் தான் வானப்பிரஸ்தனாய்க் காட்டிற்குச் சென்றான். சந்திராங்கதனும் தன்னுயிர்போல் மன்னுயிரைப் பாதுகாத்து வந்தான். சீமந்தநி எட்டுப் புதல்வர்களையும் ஒரு புதல்வியையும் பெற்றாள். அவள் தாழ்வுற்ற காலத்திற்போல வாழ்வுற்[illegible]க்கும் காலத்

திலும் சோமவாரவிரதத்தை வழுவாது விதிப்படி அநுட்டித்து வந்தாள். இங்ஙனம் சீமந்தநி சோம வார விரதத்தை அநுட்டித்து வருங்காலத்தில் நடந்த ஒரு விசேஷ சம்பவத்தை இங்கே கூறுவாம்:

விதர்ப்பநாட்டிலே தேவமித்திரன் சார்ச்சுதன் என்னும் பெயர்களுள்ள இரு பிராமணர் இருந்தார்கள். அவர்களுக்கு முறையே சுமேதா, சாமவான் என்னும் இரு புத்திரர் உளர். அவர்கள் உரியகாலத்தில் வித்தியாரம்பஞ் செய்யப்பெற்றுக் காலகதியில் வேதங்களிலும் ஆகமங்களிலும் புராணங்களிலும் மிக்க வல்லுநராயினர். அவர்களது கல்வித்திறத்தைக் கண்ட அவர்கள் தந்தையர் மனமகிழ்ந்து அவர்களை நோக்கி "மக்காள், கல்வியறிவில் இக்காலத்தில் உங்களை ஒப்பார் ஒருவருமிலர். ஆதலால் நீங்கள் இந்த நாட்டை ஆளும் நமது அரசனிடம் சென்று உங்கள் கல்வித்திறத்தைக் காட்டி அவன் மனத்தைக் கனிவித்து வேண்டிய திரவியத்தை அவனிடத்திற் பெற்று விதிப்படி கன்னியரை விவாகஞ் செய்து இல்லறத்தை நடாத்தி இனிது வாழுங்கள்" என்றனர். தங்கள் தந்தையர் சொல்லியபடி அப்பார்ப்பனச் சிறுவர் இருவரும் அரசனை யடைந்து தங்கள் கல்வித் திறமையை அவனுக்குக் காட்டிநின்றார்கள். அரசன் "உங்களுக்கு என்ன வேண்டும்" என்று கேட்டான். அதற்கு அவர்கள் "அரசனே, நாங்கள் விவாகஞ் செய்தற்குப் பொருள் பெறவேண்டி உன்னை அடைந்தோம்" என்றார்கள். அரசன் சிரித்து, "பார்ப்பனச் சிறுவர்காள், யான் [illegible]வதைக் கேளுங்கள்: நிடதநாட்டைப்

பரிபாலிக்கின்ற சந்திராங்கதனுடைய தேவியாகிய சீமந்தகி என்பவள் சோமவார விரதத்தை அன்புடன் விதிப்படி அநுட்டித்து வருகின்றாள். அவள் அவ்விரத தினத்திலே தன் சிவபூசை முடித்தபின் பிராமணரையும் அவர்கள் பத்தினிமாரையும் அழைத்து முறையே சிவபிரானாகவும் உமாதேவியாராகவும் மதித்து அவர்களைப் பூசித்து அவர்களுக்கு வேண்டிய திரவியமும் ஆடையாபரணங்களும் கொடுத்துவருகின்றாள். ஆனபடியால் உங்கள் இருவரில் ஒருவன் பெண்வேடம் பூண்டு இருவரும் தம்பதிகள்போலச் சோமவாரதினத்திற் போவீர்களாயின், அவள் உங்களை உண்மையான தம்பதிகள் என்று எண்ணிப் பூசித்து உங்களுக்கு வேண்டிய திரவியமுந் தருவாள்; அதனைப் பெற்று உங்கள் எண்ணத்தை நிறைவேற்றுங்கள்; இதற்கு உடன்பட மறுப்பீரேல் உங்களைத் தக்கபடி தண்டிப்பேன்" என்றான். பிராமணப் பிள்ளைகள் அரசன் வார்த்தையைக் கேட்டு நடுநடுங்கி, ஐயோ! அரசனே, நீராயிருந்தும் இப்படிக் கூறலாமா? நாங்கள் போலிவேடம்பூண்டு சீமந்தகியிடஞ் சென்று பொருள் ஏற்றால் கொடிய நரகத்துக்கு ஆளாவோமே. எங்கள் தந்தையர் எங்களைக் கண்டிப்பார்களே. 'வேலி பயிரைமேய நினைத்தாற்போல' அரசனாயிருந்தும் நீர் இப்படிக் கூறினால் நாங்கள் என்ன செய்வோம். எங்களுக்கு நீர் பொருள் தரவேண்டாம். நாங்கள் போகின்றோம்" என்றார்கள். அரசன் நாகம்போலச் சீறி "என் சொல்லைத் தட்டினீராயின் உங்களை இப்போதே தண்டிப்பேன், சொன்னபடி செய்யுங்கள்" என்று உறுக்கிச் சொன்னான். ஐயோ! பாவம்! சிறு பிள்ளைகள் [illegible] செய்வார்கள்.

அவன் குணத்தை அறியாமல் அவனிடம் வந்து அகப் பட்டுக்கொண்டார்கள். "கிணறு தோண்டப் பூதம் புறப்பட்டவாறுய்" முடிந்தது அவர்கள் கதி. அவர்கள் அரசனைப் பார்த்து, "சிறலை! மன்னு!! சிறலை!!! உன்றன் றிருவுள்ளப் பேறலதுண்டோ? நின் குடைவாழப்பெற் ருேர்க்கு, தாறலைபூகத் தொடுகனி தேமாத் தலைசாய, ஆறலை மோது நிடதத் திருநா டணைவோமே" அர சனே, கோபங்கொள்ளாதீர்; உம்முடைய ஆஞ்ஞைப் படி நாங்கள் போலிவேடம் பூண்டு நிடதநாட்டிற்குப் போகின்றேம்" என்ருர்கள்.

இங்ஙனம் பார்ப்பனச் சிறுவர் சொல்லுதலும், அவ் வரசன் மனமகிழ்ந்து அலங்காரஞ் செய்பவர்களை வருவித் துச் சாமவானைப் பெண்ணுருவாக அலங்கரிக்கும்படி கட்டளைசெய்தான். அலங்காரஞ் செய்வோர், கண்டோ ரெவரும் பெண்ணென்பதிற் சிறிதுஞ் சந்தேகமுருவண் ணம் அழகுறச் சாமவானை அலங்கரித்து அரசன் முன் னிலையிற் கொண்டுபோய் விடுத்தார்கள். அரசனும் போலிவேடமோ உள்ளபடி பெண்தானே என்று சந்தே கங் கொண்டான். அவ்விருவரும் தம்பதிகளென வேடம் பூண்டு சீமந்தநியிடம் செல்லும்போது கண்டோரெல்லாம் சாமவானை உண்மையான பார்ப்பனச் சிறுமியென மதித்து அவன் அழகை மெச்சினர்கள். சுமேதாவும் பெண்வேடம் பூண்ட சாமவானும் சீமந்தநியிடஞ் செல் லும் மற்றும் பார்ப்பனிகளுடன் கூடிக்கொண்டு போனர் கள். எல்லோருஞ் சீமந்தநியின் மாளிகையை அடைந் தார்கள் [illegible] வந்த பிராமணரையும் பன்னி

யரையும் முறையே சிவபிரானாகவும் உமாதேவியாராகவும் பாவித்துப் பூசித்து அவர்களுக்கு வேண்டிய திரவியத்தையும் பிறவற்றையுங் கொடுத்தாள். சுமேதாவும் பெண்வேடம் பூண்ட சாமவானும் அவள் முன்னிலையிற் போய் நின்றார்கள். சீமந்தினி அவ்விருவரும் ஆண் பிள்ளைகள் என்பதை உணர்ந்து புன்முறுவல் செய்து அவர்களைச் சிவபிரானாகவும் உமாதேவியாராகவும் பாவித்துப் பூசித்துப் பால் பழம் தேன் இளநீர் கருப்பஞ்சாறு முதலியன அவ்விருவருக்கும் அருந்தும்படி கொடுத்து வேண்டிய திரவியத்தையும் ஆடையாபரணங்களையும் தானஞ்செய்து அவர்களைத் தங்கள் ஊருக்குப் போகும்படி விடைகொடுத்தாள்.

அவ்விருவரும் தம் மூரைநோக்கிச் செல்லும்போது வழியிலே, பெண்வேடம் பூண்ட சாமவான் தன் தோழனாகிய சுமேதாவை நோக்கி "என்னுயிர்த்துணைவரே, நீர் என்னை மணஞ்செய்யவேண்டும். அதற்கு மறுப்பீராயின் இப்பொழுதே என்னுயிரை விடுவேன்; பெண் பழி உம்மை விடாது" என்றான். சுமேதா தன் நண்பன் விநோதமாக இப்படிப் பேசிக்கொண்டு வருகின்றான் என எண்ணி அவனுக்குப் பதில் சொல்லாமற் சிறிது தூரஞ் சென்றான். சாமவான் மீட்டும் சுமேதாவைப் பார்த்து "எனது துணைவரே, யான் உம்மீது காதல் கொண்டேன். என் காதலைத் தீர்த்தன்றி அப்பாலே செல்லாதீர். பெண்களாக ஒன்றை வேண்டியகாலத்து அதற்கு இசையாது போதல் ஆடவருக்கு அழகாகமாட்டாது. என்னை மேன்மேலும் ... க்காதீர்"

என்றான். சுமேதா சாமவான் கூறும் வார்த்தையிற் சந்தேகங்கொண்டு சிறிது உற்றுநோக்கினன்; என்ன ஆச்சரியம்! மகாலக்குமியை ஒத்த ஒரு பார்ப்பனக் கன்னிகை தன் பக்கத்தில் நிற்கக் கண்டான். கண்டவன் "பெண்ணே, என் தோழனுடன் இக்காட்டு மார்க்கமாய் வந்தேன், அவனைக் காண்கிலேன், உன்னைக் கண்டேன, நீ யார், இங்கே வந்த காரணமென்ன" எனக் கேட்டான். அப்பார்ப்பனக் கன்னிகை சிரித்து "என் துணைவரே கேளும், நானே பெண்வேடம்பூண்டு உம்முடன் கூடிவந்த தோழனாகிய சாமவான்; சீமந்தனி பாவனையால் உள்ளபடி பெண்ணானேன்; என் விதி இதுவாயிற்று. என்னை இனிமேற் சாமவதி என்று சொல்லுதிர். என்மேற் சந்தேகங்கொள்ளாதீர். பெண்மைக்குரிய அடையாளங்களை நீரே நேரில் என்னிடத்திற் பாரும். உம்மையன்றிப் பிறரை யான் விவாகஞ்செய்ய உடன்படேன்" என்றான்.

இவையனைத்தையும் கேட்ட சுமேதா ஏக்கங்கொண்டு "ஐயையோ, என்செய்வோம், அரசனுடைய வஞ்சனையால் எமக்கு இக்கேடு சம்பவித்தது. எங்கள் தந்தையர் அறிந்தால் எம்மைத் தண்டிப்பார்களே; கலையெலாம் உணர்ந்த சாமவான் கணப்பொழுதிற் கன்னிகையாயினனே; இதனை யறிந்தால் இவனது பெற்றார் மனம் என்ன பாடுபடும்" என்று தனக்குள்ளே எண்ணிக்கொண்டு பின்னர்ச் சாமவதியை நோக்கி "பெண்ணே, நீ அவசரப்படவேண்டாம்; நாங்கள் எங்கள் பெற்றாரிடம் போய் [illegible]க்கு நேர்ந்த விபத்தைச் சொல்லு

வோம்; பின் அவர்கள் ஆஞ்ஞைப்படி நடந்துகொள்ளுவோம்" எனக் கூறிச் சாமவதியுடன் தங்கள் நாட்டை நோக்கிச் சென்றான்.

சுமேதா சாமவதியுடன் போய் வாடிய முகத்தனாய்த் தன் பிதாவின் முன்னர் நிற்றலும், பிதா அவனைப் பார்த்து "மகனே, நீ வாட்டமுடன் வந்துநிற்ப தென்ன? இந்தப் பார்ப்பனச் சிறுமி யார்? எல்லாவற்றையும் ஒளியாமல் எனக்குச் சொல்லுதி" என்று கூறுதலும், அப்பொழுது சுமேதா சாமவானுடன் தான் விதர்ப்பராசனிடஞ் சென்றமையையும், அவனுடைய ஆணைக்கு அஞ்சிப் போலிவேடம் பூண்டு சீமந்தநியிடம் இருவரும் போனமையையும், சீமந்தநி பாவனையால் சாமவான் உள்ளபடி பெண்ணானமையையும், தன்னை விவாகஞ் செய்யும்படி பலாற்காரஞ் செய்தமையையும், தான் பிதாவின் அநுமதி பெற்று அப்படிச் செய்வதாகச் சொல்லிச் சாமவதியைக் கூட்டிக் கொண்டுவந்தமையையும் விபரமாகச் சொன்னான். வேதமித்திரன் தன் பிள்ளை சொல்லிய செய்தியை உடனே சாமவானுடைய பிதாவாகிய சார்ச்சுதனுக்குச் சொன்னான். சார்ச்சுதன் தன்னுடைய அருமந்த மகன் கன்னிகையாகமாறி நிற்கக் கண்டமாத்திரத்தில் "இவையெல்லாம் விதர்ப்பநாட்டு அரசனுடைய வஞ்சனையினாலேதான் வந்தன" என்று சொல்லிக்கொண்டு அடங்காத கோபமுடையவனாய்த் தன் பிள்ளையைக் கையிற் பிடித்துக்கொண்டு சீக்கிரமாக விதர்ப்பநாட்டுவேந்தன் முன்பு போய் "அரசனே, யாராவது ஏழைகள் பொருளைவேண்டு உன்னிடத்தில்

வந்தால், நீ உனக்கு இஷ்டமானுற் கொடுக்கலாம்; இல்லையேற் போ என்று சொல்லலாம்; அவற்றை விட்டுச் சோமவாரத்தை அநுட்டிக்கின்ற சீமந்தநியிடம் என் பிள்ளையைப் பெண்வேடம்பூண்டு போகும்படி செய்யலாமா? அப்படிச் செய்தமையினுலல்லவா என் மகன் இந்தக் கோலத்தை அடைந்தான்; ஏ அறிவிலி, என் பிள்ளையை மணமகனுகக் கண்டு மகிழ எண்ணியிருந்த நான் இந்தக் கோலத்தைக் கண்ணுற் பார்ப்பேனே? சிச்சீ; நீயும் அரசனென்று கிரீடந்தரித்துக்கொண்டிருக்கின்ருயே! எத்துணைத் தவத்தைச் செய்து இந்தப் பிள்ளையைப் பெற்ரேம். எவ்வளவு பிரயாசைப்பட்டு இப்பிள்ளையைப் படிப்பித்தோம். மணஞ்செய்யும்படி பொருளுக்காக உன்னிடம் வந்த பிள்ளைக்கு நீ இப்படிச் செய்யலாமா? என் மகனைப் பெண்ணுக்கி எங்களையும் நரகச்சிறையி லிட்டாயே; ஆ, பாதகா, என் பிள்ளையை இந்தக் கோலத்துடனே பார்த்துக்கொண்டு இருக்கமாட்டேன்; நானும் என் மனைவியும் இதோ உயிர்விடுகிரேம்; அந்தப் பழி உன்னைப் பீடிக்கட்டும்" என்று இடியிடித்தாற்போலச் சொன்னுன்.

இவையனைத்தையுங் கேட்ட அரசன் நடுநடுங்கி ஏக்கங்கொண்டு சிம்மாசனத்திலிருந்து கீழே அடியற்ற மரம்போல வீழ்ந்து சிறிதுநேரம் மூர்ச்சையாகிப் பின்னர் ஒருவாறு தேறித் தன் பக்கத்தில் இருந்த முனிவர்களை நோக்கி "தவத்தில் மேம்பட்ட முனிவர்களே, நீங்கள் இந்தப் பிராமணர் சொல்லிய செய்தி முழுவதையும் கேட்டுக்கொண்டிருந்தீர்கள்; சீமந்தநியின் விரத

வைராக்கியத்தால் இப்பார்ப்பனச் சிறுவன் இக்கோலத்தை அடைந்தான். இந்தப் பெண்கோலம் நீங்கிப் பழையபடி இவன் ஆணாதற்கு என்னால் என்ன செய்யவேண்டுமோ அதனை உடனே செய்கின்றேன் சொல்லுங்கள்" என அழுதழுது சொன்னான். அரசன் இப்படிச் சொல்லுதலும் அந்த முனிவர்கூட்டத்திலிருந்த பாரத்துவாசமுனிவர் அவனைப் பார்த்து "அரசனே, சிவாபராதத்திற்கு எளிதிற் பிராயச்சித்தங் கிடையாது; ஆனாலும் ஒன்று சொல்லுகிறேன் கேள், என்ன பாதகத்தைச் செய்தவர்களும் சர்வலோகமாதாவாகிய மனோன்மணியை அன்புடன் பூசிப்பாராயின் அப்பாதகம் சூரியனைக் கண்ட இருளைப்போல அவர்களை விட்டு நீங்கும். ஆதலினாலே அரசனே, எனக்குக் கிட்ட வா, இந்த மந்திரத்தைக் கேள், இதனை உச்சரித்துக்கொண்டு தேவியை அன்புடன் பூசைசெய்வாயாயின் அவள் உன்முன் தோன்றி உனக்கு வேண்டிய வரங்களைத் தந்து அருள்புரிவாள்" என்றனர். அரசனும் அந்த மந்திரத்தைக் கேட்டுக்கொண்டு தேவியாலயத்தை அடைந்து அதை உச்சரித்து அன்புடன் பூசைசெய்தான். தேவியும் அவனுக்குப் பிரசன்னமாகி "அரசனே, வருந்தற்க, உன்குறை யாது? உரைத்திடுதி" என்னலும், அரசன் உச்சிமேற் கைகூப்பி அழுதுகொண்டு "தாயே, சீமந்தினி பாவனையால் ஒரு பார்ப்பனச் சிறுவன் பெண்ணானான்; அதனை நீக்கியருள வேண்டும்" என்றான். அப்பொழுது தேவி புன்முறுவல் செய்து "வேந்தனே, சிவனடியவ[illegible] கருத்துக்கு

பாருக எம்மால்மாத்திரமன்று, எம்மிறைவராகிய சிவ பிரானாலும் யாதுஞ் செய்ய முடியாது; ஆதலால், இதனையொழித்து வேறு யாதும் வரம் வேண்டுமேற் கேட்குதி தருதும்" எனத் திருவாய்மலர்ந்தாள். அதற்கு அரசன் "என்னம்மே, அப்படியாயின் இச்சார்ச்சுதன் இன்னுமோர் புத்திரனைப் பெறுதற்குத் திருவருள் செய்தல்வேண்டும்" என்றிரந்து நின்றான். அப்பொழுது என்னையாளுடை யிறைவி திருவுளமகிழ்ந்து "அங்ஙனமாகுக; அன்றியும் வேந்தனே, சாமவதியைச் சுமேதாவுக்கே நீ மணம் முடித்துவைத்தல் வேண்டும்" எனத் திருவாய்மலர்ந்து மறைந்தருளினள். அரசன், தேவியின் ஆஞ்ஞைப்படியே சுமேதாவுக்குஞ் சாமவதிக்கும் மணம் நிறைவேற்றி வைத்தான். அவர்கள் சகல போகங்களையும் அநுபவித்துக்கொண்டு நெடுங்காலம் வாழ்ந்தார்கள். சார்ச்சுதனும் பின்னர் ஒரு புத்திரனைப் பெற்று வாழ்ந்தான். சீமந்தநியும் பலகாலமாய்த் தன் நாயகனுடன் சுகித்து வாழ்ந்து பின்னர்ச் சிவகதியை அடைந்தனள்.

சோமவாரவிரதமான்மியம்
முற்றிற்று.

---

[இச் 'சோமவாரவிரத மான்மியம்' பிரமோத்தர காண்டம், திருவிளையாடற்புராணம், உபதேசகாண்டம், என்னுமிவற்றை ஆதாரமாகக்கொண்டு எழுதப்பெற்றுள்ளது. சிவவிரதங்களுட் சிறந்ததாகிய இதனை, சைவ சமயிகள் அனைவரும் இந்நூலிற் சொல்லிய பிரகாரம் தம்மால் இயன்ற அளவிற்கு நியதியோடு அநுஷ்டித்து இகபரசு[illegible] இனிது வாழ்வார்களாக.]

## சோமவார விரதகாலத்தில் ஓதற்பாலனவாகிய தோத்திரப்பாக்கள்.

### (திரட்டு.)

---

திருச்சிற்றம்பலம்.

திருஞானசம்பந்தர்: பண்—காந்தாரம்.

மந்திரமாவதுநீறுவானவர்மேலதுநீறு
சுந்தரமாவதுநீறுதுதிக்கப்படுவதுநீறு
தந்திரமாவதுநீறுசமயத்திலுள்ளதுநீறு
செந்துவர்வாயுமைபங்கன்றிருவாலவாயான்றிருநீறே.

அருத்தமதாவதுநீறுஅவலமறுப்பதுநீறு
வருத்தந்தணிப்பதுநீறுவானமளிப்பதுநீறு
பொருத்தமதாவதுநீறுபுண்ணியர்பூசும்வெண்ணீறு
திருத்தகுமாளிகைசூழ்ந்ததிருவாலவாயான்றிருநீறே.

திருவிராகம்— பண்—கௌசிகம்.

வீடலாலவாயிலாய்விழுமியார்கணின்கழற்
பாடலாலவாயிலாய்பரவநின்றபண்பனே
காடலாலவாயிலாய்கபாலிநீள்கடிம்மதிற்
கூடலாலவாயிலாய்குலாயதென்னகொள்கையே.

குற்றநீகுணங்கணீகூடலாலவாயிலாய்
சுற்றநீபிரானுநீதொடர்ந்திலங்குசோதிநீ
கற்றநூற்கருத்துநீயருத்தமின்பமென்றிவை
முற்றுநீபுகழ்ந்துமுன்னுரை [illegible] ம்மனே.

# சோமவாரவிரத மான்மியம்.

திருநாவுக்கரசுநாயனார்—திருநேரிசை.

வேதியாவேதகீதாவிண்ணவரண்ணுவென்றென்
றோதியேமலர்கடூவியொருங்குநின்கழல்கள்காணப்
பாதியோர்பெண்ணைவைத்தாய்படர்சடைமதியஞ்சூடு
மாதியேயாலவாயிலப்பனேயருள்செய்யாயே.

நம்பனேநான்முகத்தாய்நாதனேஞானமூர்த்தி
யென்பொனேயீசாவென்றென்றேத்திநானேசற்றென்றும்
பின்பினேதிரிந்துநாயேன்பேர்த்தினிப்பிறவாவண்ணம்
அன்பனேயாலவாயிலப்பனேயருள்செய்யாயே.

திருத்தாண்டகம்.

முளைத்தானையெல்லார்க்குமுன்னேதோன்றி
முதிருஞ்சடைமுடிமேன்முகிழ்வெண்டிங்கள்
வளைத்தானைவல்லசுரர்புரங்கண்மூன்றும்
வரைசிலையாவாசுகிமாநாணுக்கோத்துத்
துளைத்தானைச்சுடுசரத்தாற்றுவளநீறுத்
தூமுத்தவெண்முறுவலுமையோடாடித்
திளைத்தானைத்தென்கூடற்றிருவாலவாய்ச்
சிவனடியேசிந்திக்கப்பெற்றேனானே.

வாயானைமனத்தானைமனத்துணின்ற
கருத்தானைக்கருத்தறிந்துமுடிப்பான்றன்னைத்
தூயானைத்தூவெள்ளையேற்றான்றன்னைச்
சுடர்த்திங்கட்சடையானைத்தொடர்ந்துநின்ற
தாயானைத்தவமாயதன்மையானைத்
தலையாயதேவாதிதேவர்க்கென்றுஞ்
சேயானைத்தென்கூடற்றிருவாலவாய்ச்
சிவ[illegible]பெற்றேனானே.

# சோமவாரவிரத மான்மியம்.

திருவாசகம்.

காலமுண்டாகவேகாதல்செய்துய்மின்கருதரிய
ஞாலமுண்டானொடுநான்முகன்வானவர்கண்ணரிய
வாலமுண்டானெங்கள்பாண்டிப்பிரான்றன்னடியவர்க்கு
மூலபண்டாரம்வழங்குகின்றான்வந்துமுந்துமினே.

கூற்றைவென்றாங்கைவர்கோக்களையும்வென்றிருந்தழகால்
வீற்றிருந்தான்பெருந்தேவியுந்தானுமோர்மீனவன்பா
லேற்றுவந்தாருயிருண்டதிறலொற்றைச்சேவகனே
தேற்றமிலாதவர்சேவடிசிக்கெனச்சேர்மின்களே.

நரியைக்குதிரைப்பரியாக்கிஞாலமெல்லாநிகழ்வித்துப்
பெரியதென்னன்மதுரையெல்லாம்பிச்சதேற்றும்பெருந்துறையா
யரியபொருளேயவிநாசியப்பாபாண்டிவெள்ளமே
தெரியவரியபரஞ்சோதிசெய்வதொன்றுமறியேனே.

புராணம்.

ஆலமே யமுதமாக வுண்டுவா னவர்க்களித்துக்
காலனை மார்க்கண் டர்க்காய்க் காய்ந்தனை யடியேற் கின்று
ஞாலநின் புகழேயாக வேண்டுநான் மறைக ளேத்துஞ்
சீலமே யாலவாயிற் சிவபெரு மானே யென்றார்.

இடருறப் பிணித்த விந்தப் பழியினின் றென்னை யீர்த்துன்
னடியிணைக் கன்பனாக்கு மருட்கடல் போற்றி சேற்கண்
மடவரன் மணாளா போற்றி கடம்பமா வனத்தாய் போற்றி
சுடர்விடு விமானமேய சுந்தர விடங்கபோற்றி.

எண்ணிய வெண்ணி யாங்கே யான்பெற முடித்தாய் போற்றி
பண்ணியன் மறைக டேறாப் பான் [illegible] போற்றி

புண்ணியர் தமக்கு வேதப் பொருளுரை பொருளே போற்றி
விண்ணிழி விமானமேய சுந்தர விடங்க போற்றி.

எவ்வுட லெடுத்தேன் மேனா ளெண்ணிலாப் பிறவிதோறும்
அவ்வுட லெல்லாம் பாவ மறம்பொருட் டாகவன்றோ
தெவ்வுடல் பொடித்தா யுன்றன் சேவடிக் கடிமைபூண்ட
இவ்வுட லொன்றே யன்றோ வெனக்குட லானதையா.

வேறு.

எந்தா யனைத்துலகு மீன்றாயெத் தேவர்க்குந்
தந்தாய் செழுங்குவளைத் தாராய் பெருந்துறையில்
வந்தாய் மதுரைத் திருவாலவா யுறையுஞ்
சிந்தா மணியே சிறியேற் கிரங்காயோ.

மூவா முதலாய் முதுமறையா யம்மறையுந்
தாவாத சோதித் தனிஞான பூரணமாய்த்
தேவாதி தேவாய்த் திருவால வாயுறையும்
ஆவார் கொடியா யடியேற் கிரங்காயோ

முன்னா முதுபொருட்கு முன்னா முதுபொருளாய்ப்
பின்னும் புதுமைக்கும் பின்னாகும் பேரொழியாய்த்
தென்னா மதுரைத் திருவாலவாயுறையும்
என்னாயகனே எளியேற் கிரங்காயோ.

மண்ணாய்ப் புனலாய்க் கனலாய் வெளியாகி
விண்ணா யிருசுடரா யித்தனையும் வேறாகிப்
பண்ணா யிசையாய்ப் பனுவலா யெங்கண்ணுங்
கண்ணாணே யென் னுறுகண் காணாவாறென் கொல்லோ.

பொங்குஞ் சினமடங்கல் போன்றுருத்து வெங்கூற்றம்
அங்கும் ப[...] தாழ்ந்து நான்

மங்கும் படியறிந்தும் வந்தஞ்ச லென்கிலையால்
எங்குஞ் செவியுடையாய் கேளாயோ வென்னுரையே.

வேறு.

பாதமலரிணைபோற்றிபன்னிரண்டுகையானைப்பயந்தாய்போற்றி
வேதமுடிகடந்தபராஞானத்திலானந்தவிளைவேபோற்றி [போற்றி
போதவடிவாய்நால்வர்க்கசைவிறந்துநிறைந்தபரம்பொருளே
மாதவளநீறணிந்தமன்னவங்கயற்கண்ணிமணாளபோற்றி.

வேறு.

பழியொடு பாசமாற கெடவாச வன்செய்
பணிகொண்ட வண்ட சரணம்
வழிபடு தொண்டர் கொண்ட நிலைகண்டு வெள்ளி
மணிமன்று ளாடி சரணஞ்
செழியன் விளிந்திடாத படிமாறி யாட
றெளிவித்த சோதி சரணம்
எழுகடல் கூவி மாமி யுடன்மாம னூட
விசைவித்த வாதி சரணம்.

வெங்கரி யாவிசோர நரசிங்கவாளி விடுவேடரேறு சரணம்
புங்கவர் தேறவாதி மறையுட்கிடந்த பொருளோது போத சரணம்
வங்கமதேறிவேலை மகரம்பிடித்த வலையான் மணாள சரணங்
கங்கணநாகம்வீசி நகரெல்லைகண்ட கறைகொண்டகண்ட சரணம்.

மைந்தனி லாழிமேரு மகவானகந்தை மடிவித்த நித்த சரணஞ்
சுந்தரநாமவாளி பணிகொண்டு கிள்ளிதொகை வென்றவீரசரணம்
வெந்திறன்மாறன்முன்கலுநவானைகன்னன்மிசைவித்தசித்தசரண
முந்தியகல்லின்மாதர்பெறவட்டசித்தி முயல்வித்தயோகிசரணம்.

திருமணிமைந்தன்மைந்தன்முடிசூட விற்றதிருமல்குசெல்வசரண
மருமகனென்றுமாமனுருவாய்வழங் ... ணம்

# சோமவாரவிரத மான்மியம்.

குருமொழிதந்துநாரைகுருவிக்குவீடுகுடிதந்தவெர்ளைதசரணம்
வருபழியஞ்சிவேடமகனுக்கிரங்குமதுராபுரேசசரணம்.

விருத்தகுமாரபாலவருண்மேனிகொண்டுவிளையாடுமண்ணல்சரணங்
குரத்தியைநச்சுபாவியுயிருண்டுசோரிகுடைவாகைவேலசரணங்
கருத்திசைபாணனுளினிசைபாடிமாறுகளைவேதகீதசரணம்
நரித்திரண்மாவைமீளநகரங்கலங்கநரிசெய்தநம்பசரணம்.

முற்பகலாறிரண்டுசிறுபன்றியுண்ணமுலைதந்தவன்னைசரணம் [ம்
பொற்புறுமாயவாவையடலேறுகொண்டுபொருதட்டசிட்டசரண
பற்பலஞாலமெங்குமடையப்பிரம்புபடுமட்டமூர்த்திசரணங்
கற்பினொருத்திமன்றலறிவிக்கமூன்றுகரிதந்தவள்ளல்சரணம்.

அளவைகளாலும் வேத முதனூல்களாலு
    மயன் மாயனாலு மளவாக்
களவையுணக்கு நாமகுண சின்னசாதி
    கதிசெய்தி யில்லையவையு
முளவென யாமறிந்து துதிசெய்ய வேகொ
    லுலகஞ் செயன்பி னெளிதாய்
விளையருண் மேனிகொண்டிவ் வறுபத்துநாலு
    விளையாடல் செய்தபடியே.

---

## சிவபெருமான் சந்நிதானத்தில் திருநந்திதேவர் விண்ணப்பஞ்செய்தருளிய பதினாறு பேறு.

மறைகணிந்தனை சைவநிந் தனைபொரு மனமும்
தறுகணைம்புலன் களுக்கேவல் செய்யுருச் சதுரும்
பிறவி தீதெனப் பேதையர் தம்மொடு பிணக்கும்
உறவி [illegible] ய்ப்பவர் தங்களோடுறவும்.

# சோமவாரவிரத மான்மியம்.

[illegible]து நல்லன்பர் கேட்கினு முதவுறு மியல்பும்
மாத வத்தினோ ரொறுப்பினும் வணங்கிடு மகிழ்வும்
ஓது நல்லுபதேசமெய் யுறுதிபு மன்பர்
தீது செய்யினுஞ் சிவச்செய லெனக்கொழுந் தெளிவும்.

மனமும் வாக்குநின் னன்பர்பா லொருப்படு செயலும்
கனவி லும்முள தன்பருக் கடிமையாங் கருத்தும்
நினைவில் வேறொரு கடவுளை வழிபடா நிலையும்
புனித நின்புகழ் நாடொறு முரைத்திடும் பொலிவும்.

தீமை யாம்புறச் சமயங்க ளொழித்திடுந் திறனும்
வாய்மை யாகவே பிறர்பொருள் விழைவுறா வளனும்
ஏழு றும்பர தாரநச் சிடாதநன் னெஞ்சும்
தூய்மை நெஞ்சின்யா னெனதெனுஞ் செருக்கறுந் துறவும்.

துறக்கமீ துறையினு நரகிற் றோய்கினும்
இறக்கினும் பிறக்கினு மின்பந் துய்க்கினும்
பிறைக்கொழுந் தணிசடைப் பெரும விவ்வரம்
மறுத்திடா தெனக்குநீ வழங்கல் வேண்டுமால்.

வேறு.

துதிவாணிவீரம்விசயஞ்சந்தானந்துணிவுதனம்
மதிதானியம்சௌபாக்கியம்போகம்அறிவழகு
புதிதாம்பெருமையறங்குலநோயகல்பூண்வயது
பதினாறுபேறுந்தருவாய்மதுரைப்பராபரனே.

திருச்சிற்றம்பலம்

---